**சார்பு நீதிமன்றம், தேனி**
**முன்னிலை: திருமதி.R.கீதா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, தேனி**
**2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 29/2020**

**மற்றும்**

**இ.ம.எண். 2/2023**

**உள்**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 29/2020**

**(CNR No: TNTH 03 – 000553 – 2020)**

**உள்**

**அசல் வழக்கு எண். 57/2017**

சு. பால்ச்சாமி .... மேல்முறையீட்டாளர் / வாதி

**// எதிர் //**

1. சுபீர்கான்
2. ஐஸ்நிஷா
3. சன்னத்துரோஜா (இறப்பு)
4. பைரோஸ்
5. சாரத்நிஷா
6. தாகிராபானு
7. கனரா வங்கி கடமலைக்குண்டு
   கிளை மேலாளர் அவர்கள் மூலமாக
   (Amended as per Order passed in I.A.No.1/2023, dated: 22.08.2023)

... எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 6, 8 பிரதிவாதிகள்

தாவா மேல்முறையீடு ஆண்டிபட்டி, கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.57/2017 வழக்கில்

26.06.2020ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**கீழமை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் தகுநிலை :-**

**அசல் வழக்கு எண். 57/2017**

பால்ச்சாமி .... வாதி

**//எதிர் //**

1. சுபீர்கான்
2. ஐஸ்நிஷா
3. சன்னத்துரோஜா
4. பைரோஸ்
5. சாரத்நிஷா
6. தாகிராபானு
7. மகேஸ்வரி (இறப்பு நீக்கரவு செய்யப்பட்டார்)
 (Amended as per Order passed in I.A.No.2/2020, dated: 06.02.2020)
8. கனரா வங்கி கடமலைக்குண்டு
 கிளை மேலாளர் மூலமாக ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது இறுதி விசாரணைக்காக 12.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. மகேந்திரன், B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. K. ஹசன் முகமது, M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மை காரணமாக அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. SG. சுந்தரராஜ், M.A., B.L., அவர்கள்

முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியாலும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

இம்மேல்முறையீடானது கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி அசல் வழக்கு எண்.57/2017ல் கடந்த 26.06.2020ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பளிக்க வேண்டி, மேற்கண்ட அசல் வழக்கு எண். 57/2017ல் தோல்வியுற்ற வாதி தரப்பில், உரிமைகள் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 1 பிரிவு 96 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அசல் வழக்கானது இம்மேல்முறையீட்டாளர் வாதியாக இருந்து அசல் வழக்கு பிரதிவாதிகளான இந்தநிர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்து வாதிக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரமும் அதனைத் தொடர்ந்து தாவா சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ அவர் வகை ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வேண்டி வழக்கிடப்பட்டுள்ளது.

**3. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

வாதி தனது பிராதில் தாவா சொத்தானது ஆதியில் பழைய சர்வே எண்.553/2 விஸ்தீரணம் 69 ஏக்கர் 40 செண்ட் அரசு தரிசு நிலமாக இருந்ததை பவளமுத்து அவர்களும் 31 கூட்டாளிகளும் சேர்ந்து சீர்திருத்தம் செய்து பழைய சர்வே எண்.553/2 ன் புதிய சர்வே எண். 1356/6 ல் உள்ள ஹெக்டர் 1 ஏர்ஸ் 15 நிலத்தை பவளமுத்து கையகப்படுத்தி அவரது உடைமையில் வைத்திருந்து 22.05.1971 அன்று மைதீன்மீரான் ராவுத்தர் அவர்கள் மனைவி ஆயிஷாபீவி அவர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், அப்போது கிழக்கு மாலாக பவளமுத்து மனைவியுடன் பிறந்த வகையறாவிற்கு பாத்தியப்பட்ட நிலத்தை தன் கைவசம் உள்ள நிலம் என்று பவளமுத்து காண்பித்துள்ளார் என்றும், ஆனால் பிராது சொத்திற்கு கீழ்புறம் குணசுந்தரி அவர்களும் அதற்கு கீழ்புறம் மகேஸ்வரி அவர்களும் அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும், மேற்படி சொத்தை ஆயிஷாபீவி அவர்கள் அனுபவித்த மால் பிரகாரம் இந்த வாதிக்கு 05.06.2000 அன்று கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், மேற்படி பத்திரத்தில் சர்வே எண்.1356/6 என்று மட்டும் தான் உள்ளது என்றும், ஆனால், ஆயிஷாபீவி அனுபவித்த வேறு நிலங்களையும் சேர்த்து கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அதில் தாவா சொத்து அடங்கிய சர்வே எண்.1356/7A யும் அடங்கும் என்றும், அதற்கு மேற்கு பக்கமுள்ள 1356/6 ஐ இந்த வாதி அனுபவித்து வருகிறார் என்றும்,

இந்நிலையில், தாவா சொத்து குறித்து எந்தவித உரிமையும் இல்லாத 2 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு 27.07.2010 அன்று ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரமும், 7ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு 25.07.2016 அன்று ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரமும் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றும், அதனடிப்படையில் 1ம் பிரதிவாதி, 8ம் பிரதிவாதியின் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்ற விபரம் 2017 ல் இந்த வாதிக்கு தெரிய வரவே, 1ம் பிரதிவாதியிடம் நேரடியாக சென்று கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டார் என்றும், 01.06.2017 ல் 1 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தார்கள் என்றும், ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண். 7/2005 மேற்படி சர்வே எண்.1356/6 சம்மந்தமாக தாக்கல் செய்து அதில் சமரச குறிப்பாணை தாக்கல் செய்து அதனடிப்படையில் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் இந்த பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**4. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

1ம் பிரதிவாதியின் பாட்டியான ஆயிஷாபீவி என்பவர் 05.06.2000ம் தேதி சர்வே எண்.1356/6 ல் உள்ள 3 ஏக்கர் நிலத்தை வாதி பெயருக்கு கிரையம் கொடுத்து, அவரின் பெயரிலேயே பட்டா ஏற்பட்டு, அவரது உடைமையில் வைத்து அனுபவித்து வருகிறார் என்பது மட்டுமே உண்மை என்றும், தாவா சொத்துக்கும் வாதிக்கும் எந்தவொரு சம்மந்தமும்

இல்லை என்றும், 2002 ம் வருடம் ஆயிஷாபீவி என்பவர் இறந்தபிறகு தாவா சொத்தை அவரது வாரிசுகள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றும், அதன் பிறகு 1ம் பிரதிவாதிக்கு மற்ற வாரிசுகள் 27.07.2010 அன்று ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றும், இந்நிலையில், 7ம் பிரதிவாதி பெயரில் நில மேம்பாட்டு திட்டத்தின்படி தவறுதலாக தாவா சொத்தின் பட்டா ஏற்பட்டு விட்டதால், 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 25.07.2014 அன்று 7 ம் பிரதிவாதி அவரது பாகத்தையும் ஒரு பதிவு செய்த ஆவணத்தின் மூலம் விட்டு கொடுத்துவிட்டார் என்றும், 04.09.2012 மற்றும் 30.08.2013 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வருசநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாய கடன் பெற்றுள்ளார் என்றும், தாவா சொத்துக்கு கிஸ்தியும் செலுத்தி வருகிறார் என்றும், இந்த வாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. விசாரணை நீதிமன்றத்தால் இந்த வழக்கினை உரிய முறையில் தீர்மானிக்க ஏதுவாக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **1.** | **தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதி கூறுவது சரியா?** |

| | |
|---|---|
| 2. | **வாதி கோரும் நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?** |
| 3. | **தாவா வழக்கு முன் தீர்ப்புத்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?** |
| 4. | **வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?** |

6. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1ன் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களும், பி.வா.சா.2ன் மூலமாக பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. இரு தரப்பு வாதுரைகள் சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வாத உரைகளை பரிசீலனை செய்த கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆண்டிப்பட்டி தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ்க்கு செண்ட் 90 சேர்த்து தான் வா.சா.ஆ.1 மூலம் வாதியின் கிரையதாரரான ஆயிஷாபீவியும், வா.சா.ஆ.4 மூலம் வாதியும் கிரையம் பெற்றனர் என்பதையும், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதையும் வாதி தகுந்த சாட்சிய சான்றாவணம் மூலம்

நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்து 26.06.2020 ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது.

**8. கனம் ஆண்டிபட்டி, மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள் அசல் வழக்கு எண். 57/2017 ல் கடந்த 26.06.2020 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற வாதி இம்மேல்முறையீட்டை கீழ்கண்ட காரணங்களுக்காக தாக்கல் செய்துள்ளார்:– அவை:**

i) விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வழங்கிய தீர்ப்பு சட்டபடியும் சங்கதிகள்படியும், உபயதரப்பினர்கள் தாக்கல் செய்த வழக்குரை, எதிர்வழக்குரை, தரப்பினர்கள் அளித்த சாட்சியங்கள் மற்றும் வழக்கின் தன்மைக்கு விரோதமாகவும் தவறாக தீர்மானித்து வாதி அசல் வழக்கில் கோரிய பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் மிக முக்கியமாக தீர்வுகான வேண்டிய சட்டப்படியான பிரச்சனைகளை கருத்தில் கொண்டு தீர்வு காண தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கின் தரப்பினர்களுக்குள் எழுப்பிய வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் சீர்தூக்கி பார்த்து சட்டபடி தீர்வு காண தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கு சொத்தும், அதற்கு மேற்கு பக்கமுள்ள சர்வே எண்.1356/6 ல் கட்டுபட்டுள்ள நிலம் வாதியின் முன்பாத்தியஸ்தர் ஆயிசாபீவி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை உபயதரப்பினர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர் என்பதை சீர்தூக்கி பார்த்து

அசல் வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை வழங்க தவறிவிட்டது என்றும், வாதியின் முன்பாத்தியஸ்தர் ஆயிசாபீவி அவர்களுக்கு வா.சா.ஆ.1 ஆவணம் பிரகாரம் 3 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றதாக குறிப்பிடபட்டிருப்பினும் நான்குமால்கள் பிரகாரம் ஏக்கர் 3 செண்டு 94 நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று தீர்மானித்து அசல் வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை வழங்க தவறிவிட்டது என்றும்,

ii) விசாரணை நீதிமன்றம் Ex.A.1 ஆவணம் பிரகாரம் சர்வே எண்.1356/6 ல் கட்டுபட்ட 3 ஏக்கர் மற்றும் 1356/7A ல் கட்டுப்பட்ட 94 செண்டையும் ஆக மொத்தம் 3 ஏக்கர் 94 செண்டை இந்த நம்பர் வாதிக்கு நான்குமால்களுக்குள் உட்படுத்தி வா.சா.ஆ.4 ஆவணம் பிரகாரம் கிரையத்திற்கு விற்றுவிட்டார் என்று தீர்க்கமாக முடிவு செய்து, வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணம் பிரகாரம் சர்வே எண்.1356/6 மற்றும் 1356/7A ல் கட்டுப்பட்ட 3 ஏக்கர் 94 செண்டிற்கு நான்குமால்கள் காண்பிக்கப்பட்டுள்ளதால் விஸ்தீரண குறைபாடு அல்லது சர்வே எண் விடுபடுதல் அல்லது மாறுபடுதல் போன்ற தாவா ஏற்படும் பட்சத்தில் நான்குமால்களின் அடிப்படையில் (Four Bounderies will preveil over the extent and survey number) தீர்மானிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணத்தில் வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும்

விஸ்தீரணம் விடுபட்டிருப்பினும் வழக்கு சொத்தை உள்ளடக்கி நான்கு மால்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை சீர்தூக்கி பார்த்து பிராது சொத்து வாதிக்கு Ex.A.1 உரிமையாளரால் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வாதிக்கு விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணம் பிரகாரம் ஆயிஷாபீவி அவர்கள் வாதிக்கு கிரையம் கொடுத்த பின்பு மேற்கண்ட ஆவணம் ஆயிஷாபீவி அவர்களின் வாரிசுகளை கட்டுப்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டு வாதி கோரிய பரிகாரம் வழங்கி தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணத்தை ஆயிஷாபீவி அவர்கள் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளதையும் மேற்கண்ட ஆவண சொத்தின் உரிமை மாற்றத்தையும் பிரதிவாதிகள் ஒத்துக்கொண்டுள்ளதையும் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதையும் சீர்தூக்கி பார்த்து வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும்,

iii) விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணம் உரிமை மாற்றம் வழக்கு சொத்திற்குரியது என்பதை தீர்மானித்து வழக்கு சொத்தில் வாதிக்கு உரிமை, உடமை, அனுபவம் உள்ளது என்பதை தீர்மானித்து வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் D.W.1 மற்றும் D.W.2 ஆகியோர்கள் அளித்துள்ள சாட்சியங்களில் பிராது சொத்திற்கு கிழக்கு மாலாக குணசுந்தரி நிலம் உள்ளதை ஒத்துக்கொண்டுள்ளதையும், Ex.A.4 ஆவணத்தில் கிழக்கு மாலில் குணசுந்தரி நிலம் குறிப்பிட்டுள்ளதையும் சீர்தூக்கி பார்த்து பிராது சொத்தை

வாதிக்கு 1ம் பிரதிவாதியின் பாட்டி ஆயிஷாபீவி அவர்கள் கிரையத்திற்கு விற்றுவிட்டதால் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்மானித்து வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கதக்கது என்று வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் பிராது சொத்திற்கு கிழக்கு பக்கம் குணசுந்தரி நிலம் உள்ளதை D.W.1 மற்றும் D.W.2 ஒத்துக்கொண்டுள்ளதையும் (Admitted fact need not be proved) Ex.A.4 ஆவண பிரகாரம் பிராது சொத்தை ஆயிசா பீவி அவர்கள் வாதிக்கு, கிரையத்திற்கு விற்றுவிட்டார் என்று தீர்மானித்து ஆயிசாபீவி வாரிசுகளுக்கு பிராது சொத்தில் யாதொரு பாத்தியமுமில்லை என்று அசல் வழக்கில் விடை காண தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கு சொத்தை ஆயிசாபீவி அவர்கள் வாதிக்கு Ex.A.4 பிரகாரம் கிரையத்திற்கு விற்றபின் ஆயிசாபீவீயின் வழிதோன்றல்களான பிரதிவாதிகளுக்கு பிராது சொத்தில் யாதொரு பாத்தியமும் இல்லையென்று தீர்க்கமாக முடிவு செய்து பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை விவரங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களின்படி யதொரு உரிமையுமில்லை என்று தீர்மானித்து வாதிக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும்,

iv) விசாரணை நீதிமன்றம் பிராது சொத்திற்கு பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் பிராது சொத்தை வாதிக்கு Ex.A.4 ஆவண பிரகாரம் கிரையத்திற்கு கடந்த 05.06.2000ம் தேதியே சுவாதீனம் ஒப்படைக்கவிட்டது என்று தீர்மானித்து

கிரையத்திற்கு விற்ற பின்பு உரிமை ஏதுமின்றி வருவாய்துறை ஆவணங்கள் தவறுதலாக ஏற்பட்டுள்ளதாக தீர்மானித்து மேற்கண்ட ஆவணங்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு விரோதமாக தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் உரிமையை விளம்புகை செய்ய கோரும் வழக்குகளில் உபயதரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள உரிமைக்குரிய ஆவணங்களின் அடிப்படையில் தீர்மானிக்க தவறியதோடு வருவாய்துறை ஆவணங்களை கருத்தில் கொண்டு தவறாக தீர்மானித்து அசல் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதிக்கு ஆயிசாபீவி அவர்கள் Ex.A.4 ஆவண பிரகாரம் வழக்கு சொத்தின் உரிமையை Registration Act Sec 17 பிரகாரம் உரிமை மாற்றம் செய்து கொடுத்துவிட்டார் என்று தீர்மானித்து அசல் வழக்கை வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 2006 (5) SCC 466. (2012) MLJ232 மெட்ராஸ் மற்றும் AIR 1986 SCC போன்ற முன் தீர்ப்புகள் சர்வே எண் தவறு அல்ல சர்வே எண் விடுபடல் மற்றும் விஸ்தீரணம் தவறு அல்லது விடுபடல் போன்றவற்றில் தாவா ஏற்பட்டால் நான்கு எல்கை மால்களை வைத்து தீர்மானிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளதும், Ex.A.4 கிரைய ஆவணத்தில் சர்வே எண், விஸ்தீரணம் விடுபட்டிருப்பினும் நான்குமால்கள் பிரகாரம் வழக்கு சொத்தை வாதிக்கு ஆயிசாபீவி அவர்கள் கிரையத்திற்கு விற்றுவிட்டார் என்பதால் மேற்கண்ட முன் தீர்ப்புகள் இவ்வழக்கிற்கு முற்றிலும் பொருந்த

கூடியது என்பதை கருத்தில் கொண்டு வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்க தவறிவிட்டது என்றும்,

v) விசாரணை நீதிமன்றம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்கள்; Ex.B.10, Ex.B.6 ஆவணங்கள் 1ம் பிரதிவாதி பெயரில் உரிமை ஏதுமில்லாமல் தவறாக ஏற்பட்டுள்ளது என்பதோடு வருவாய்துறை ஆவணங்கள் வழக்கு சொத்தின் உரிமையை தீர்மானிக்க வருவாய்துறை ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளதக்க ஆவணங்கள் இல்லையென்று தீர்க்கமாக முடிவு செய்து தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணம் பிரகாரம் வாதிக்கு ஆயிசாபீவி கிரையத்திற்கு விற்றபின்பு பிராது சொத்தில் உரிமையேதுமின்றி மேற்படியார்களின் வாரிசுகள் என்று குறிப்பிட்டு Ex.A.9 ஆவணத்தை உற்பத்தி செய்து கொண்டதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையுமில்லையென்று தீர்க்கமாக முடிவு காண தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் Ex.A.4 ஆவணத்தின் அடிப்படையில் பிராது சொத்தை வாதிக்கு கிரையத்திற்கு விற்றபின்பு பாத்தியம் ஏதுமில்லாத 7ம் பிரதிவாதியிடம் 1ம் பிரதிவாதி பாக பாத்திய விடுதலை ஆவணத்தை உற்பத்தி செய்து கொண்டதன் அடிப்படையில் யாதொரு உரிமையுமில்லையென்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு Ex.A.1 to Ex.A.8 வரை தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நிரூபணமாக உள்ளது என்பதை சட்டப்படி ஆராய்ந்து வாதிக்கு ஆதரவாக

தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதி பெயரில் வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், கிஸ்தி தாக்கல் செய்யவில்லையென்றும் வாதியின் அனுபவித்தில் இல்லையென்றும் தவறாக தீர்மானித்துவிட்டது என்றும்,

vi) உரிமை விளம்புகை வழக்குகளில் உரிமைக்குரிய ஆவணங்களை அடிப்படையிலேயே தீர்மானிக்காததோடு வருவாய்துறையினர் வாதி பெயருக்கு பட்டா வழங்கினாலும், வழங்காவிட்டாலும் வாதியின் உரிமையை விளம்புகை செய்வதற்கு உரிமையியில் நீதிமன்றத்தில் C.P.C Sec 9 பிரகாரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்தவொரு தடையுமில்லை என்பனை கருத்தில் கொண்டு வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் P.W.1 முதல் P.W.3 வரையுள்ள சாட்சிகள் Ex.A.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தையே ஒத்துக்கொண்டுள்ளனர் என்றும், Ex.A.4 ஆவணத்தில் நான்குமால்கள் பிரகாரம் விஸ்தீரண மாறுபாடு உள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சிகள் பிராது சொத்தின் சுவாதீணம் வாதி வசம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதை ஏற்று வாதி கோரிய பரிகாரம் வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் P.W.1 to P.W.3 வரை உள்ள சாட்சியங்கள் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது வாதி தரப்பு ஆவணங்களை காட்டி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆவணத்தில் உள்ள விவரத்தை ஒத்துக்கொண்டது வாதியின் வழக்கை பாதிக்காது என்பதோடு Ex.A.4 ஆவணத்தில்

விஸ்தீரணம் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளதை சீர்தூக்கி பார்த்து மேற்கண்ட Admission வாதியின் வழக்கை பாதிக்காது என்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் நான்குமால்களில் உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லையென்று தவறாக கூறியுள்ளதோடு பிராது சொத்தின் தெற்குமாலில் உள்ள இரத்தினம் அவர்களின் நிலத்தை ஒத்தி சுவாதீனத்தில் உள்ள சுப்புராஜ் மகன் பாண்டியராஜ் P.W.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதையும், Ex.A.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமால்களில் சுவாதீணத்தில் உள்ள நபர்களை D.W.1 மற்றும் D.W.2 பிரதிவாதிகள் சாட்சி ஒத்துக்கொண்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பிரதிவாதிகள் ஒத்துக்கொண்டுள்ளதை வாதி நிருபிக்க வேண்டிய அவசியமில்லையென்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும்,

vii) விசாரணை நீதிமன்றம் பிராது சொத்தின் கிழக்கு மாலில் உள்ள குணசுந்தரி நிலம் உள்ளதை காட்டுவதற்கு Ex.A.8 ஆவணம் தாக்கல் செய்துள்ளதையும், பிராது சொத்திற்கு கிழக்கு பக்கம் குணசுந்தரி நிலம் உள்ளதை D.W.2 ஒத்துக்கொண்டுள்ளதை சீர்தூக்கி பார்த்து வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வாதியை சாட்சியாக விசாரிக்கவில்லையென்றும், சாட்சியாக விசாரிக்காததற்கு முறையாக காரணம் குறிப்பிடவில்லை என்று தவறாக தீர்மானித்துவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் P.W.1 மற்றும் P.W.2 நிரூபண வாக்குமூலத்தில் வாதி எழுந்து நடமாட முடியாத சூழ்நிலையில் உள்ளதை

குறிப்பிட்டுள்ளதையும் பிராது சொத்து பற்றி அறிந்துள்ள வாதியின் மகன்கள் P.W.1 மற்றும் P.W.2 விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் வழக்கு விவரம் தெரிந்த நபர்களை உபயதரப்பினர்களின் சார்பாக விசாரிக்க யாதொரு தடையுமில்லை என்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கு எண்.7/2005 வழக்கில் ஆயிசாபீவி மகன் காதர்ஒலி அவர்கள் சாட்சியாக விசாரிக்கப்பட்ட Ex.A.7 சாட்சி வாக்குமூலத்தில் பவளமுத்து அவர்களிடம் கிரையம் பெற்ற சொத்து முழுவதையும் இந்த நம்பர் வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டதாகவும், வேறு நிலம் ஏதுமில்லையென்றும் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து Ex.A.1 ஆவண சொத்து முழுவதையும் இந்த நம்பர் வாதிக்கு Ex.A.4 ஆவண பிரகாரம் கிரையத்திற்கு விற்கப்பட்டுள்ளது என்பதால் பிராது சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்வு காண தவறிவிட்டது என்றும்,

viii) விசாரணை நீதிமன்றம் பிராது சொத்திற்கு கீழ்புரம் குணசுந்தரியும், அதற்கு கீழ்புரம் காமராஜ் பாண்டியன் அனுபவத்தில் உள்ள விவரத்தை D.W.2 ஒத்துக்கொண்டுள்ளதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்திலோ அதற்கு கீழ்பக்கமுள்ள 1356/7C சொத்திலோ யாதொரு பாத்தியமும் இல்லையென்று தீர்மானிக்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கின் பொருண்மை "falsa demonstratio non nocet" சட்ட கோட்பாட்டின்படி உள்ளதையும், அதனடிப்படையில் வாதி கிரையம் பெற்ற Ex.A.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணம் மாறுபாடாக உள்ளது வாதியின்

வழக்கை பாதிக்காது என்று தீர்மானித்து வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்று தீர்வு காண தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் முறையாக வாதி மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் எதிர்க்குரை ஆவண சாட்சியங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் ஆகியவைகளை கருத்தில் கொண்டு அசல் வழக்கில் வாதி கோரிய விளம்புகை பரிகாரம் அதன் காரணபரிகார்த்தமாக நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வாதியின் உரிமையை சீர்தூக்கி பார்த்து வாதி கோரிய பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை வழங்க தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பரிகாரம் கிடைக்கதக்கது என்பதை சட்டப்படி தீர்வு காண தவறிவிட்டது என்றும், ஆகையால் விசாரணை நீதிமன்றம் வாதிக்கு எதிராக வழங்கிய தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பை இரத்து செய்து வாதி அசல் வழக்கில் கோரிய பரிகாரம் வழங்கி மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டை செலவு தொகையுடன் அனுமதிக்குமாறு வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**9. இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளரான வாதி தரப்பில் தாவா சொத்தை ஸ்தல ஆய்வு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை கட்டளை 26 விதி 9 – ன் கீழ் இடைநிலை மனு எண்.2/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**i) இ.ம.எண்.2/2023 மனுவின் சுருக்கம் :**

i) இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளார் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதார்கள் மீது மனு சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய கோரியும், அதன் காரண பரிகார்த்தமாக நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்து முழு விசாரணை மேற்கொள்ளப்பட்டு கடந்த 26.06.2020ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி செய்யபட்ட தீர்ப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 29/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் மேல்முறையீட்டில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு விவர குறிப்பு ஆகியவற்றை இந்த மனுவில் ஒரு பாகமாக சேர்த்து வாசித்து கொள்ள வேண்டும் என்றும், மனு சொத்து பழைய சர்வே எண்:553/2 க்கு புதிய சர்வே எண்:1356/6 மற்றும் 1356/7A ல் கட்டுப்பட்ட நிலங்களை பவளமுத்து அவர்கள் கையகப்படுத்தி அனுபவித்து வந்து கடந்த 22.05.1971ம் தேதி ஆயிஷாபீவி அவர்களுக்கு கிரையத்திற்கு விற்றுவிட்டார் என்றும், ஆயிஷாபீவி அவர்களுக்கு கிரையத்திற்கு விற்றபோது சர்வே எண்:1356/6 மற்றும் 1356/7A ஆகிய இரு சர்வே எண்களில் கட்டுப்பட்ட நிலத்திற்குரிய வீஸ்தீரணத்தை நான்குமால்களுக்குள் கட்டுப்படுத்தி கிரையத்திற்கு விற்றுவிட்டார் என்றும், மேற்கண்ட இரு சர்வே எண்களில் கட்டுப்பட்ட நிலத்தை அயீஷாபீவி

அவர்கள் தனது உடமையில் வைத்து அனுபவித்து வந்து, Ex.A.4 ஆவண பிரகாரம் கடந்த 05.06.2000ம் தேதி மனுதாரருக்கு ஆயிஷாபீவி அவர்கள் விற்றுவிட்டார் என்றும்,

ii) Ex.A.4 ஆவண பிரகாரம் கிரையத்திற்கு விற்ற ஆவணத்தில் சர்வே எண்:1356/6 மற்றும் 1356/7A ஆகிய சர்வே எண்களில் கட்டுப்பட்ட நிலங்களுக்குரிய நான்குமால்களை உள்ளடக்கி கிரையத்திற்கு விற்றுவிற்றார் என்றும், Ex.A.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமால் பிரகாரம் வழக்கு சொத்தையும் உள்ளடக்கி கிரையத்திற்கு விற்ற விவரத்தையும், பிராது சொத்தையும் மனுதாரர் அனுபவித்து வரும் விவரத்தை D.W.2 தனது குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்டுள்ளார் என்றும், ஒத்துக்கொண்டுள்ள சங்கதிகளை மனுதாரர் நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றாலும், சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரருக்கு உள்ளது என்றும், மனுதாரர் கிரையம் பெற்ற மனுதாரர் முன் பாத்தியஸ்தர் ஆயிஷாபீவி அவர்களுக்கு வழக்கு சொத்தும், சர்வே எண்:1356/6 சொத்தும் பாத்தியப்பட்டிருந்தது என்பதை உபய தரப்பினர்கள் ஒத்துக்கொண்டுள்ளபடியாலும், Ex.A.4 ஆவண பிரகாரம் சர்வே எண்:1356/6 மற்றும் 1356/7A ஆகிய இரு சர்வே எண்களில் கட்டுப்பட்ட சொத்துக்கள் நான்குமால்களுக்குள் உள்ளடங்கியுள்ளதா? அல்லது தனித்துள்ளதா? போன்ற விவரங்களை ஆவண சாட்சியங்களின் மூலம் நீருபிப்பது சிரமம் என்பதால் மேற்கண்ட இரண்டு சர்வே எண்களில் கட்டுப்பட்ட நிலங்கள் Ex.A.4 ஆவண நான்குமால்களுக்குள்

கட்டுப்பட்டுள்ளதா என்ற விவரத்தை தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து Ex.A.4 ஆவண நான்குமால்களில் கட்டுப்பட்டுள்ள நிலங்களை அளந்து அத்துமால் செய்து உள்ள விஸ்தீரணம் மற்றும் எத்தனை சர்வே எண்கள் மேற்கண்ட நான்குமால்களுக்குள் கட்டுப்பட்டுள்ளது போன்ற பௌதீக தன்மை விவரங்களை குறிப்பெடுத்து பௌதீக அமைப்பை காட்டக்கூடிய மாதிரி வரைபடம் தயார் செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் Ex.A.4 ஆவண நான்குமால்களுக்குள் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலம் உள்ளது எத்தனை சர்வே எண்களில் கட்டுப்பட்டுள்ளது போன்ற விவரங்களை வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலமாக நிருபிக்க இயலாது என்பதால் மேற்கண்ட விபரங்களின் அறிய தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரி தாக்கல் செய்யும் இம்மனுவை ஏற்காது போனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் தாங்கமுடியாத இழப்பும் ஏற்படும் என்றும், ஆகையால் மனுதாரர் கிரையம் பெற்ற Ex.A.4 ஆவண நான்குமால்களுக்குள் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலம் உள்ளது எத்தனை சர்வே எண்களில் கட்டுப்பட்டுள்ளது போன்ற விவரங்களை அளந்து பௌதீக தன்மையை குறிப்பெடுத்து அறிக்கை தாக்கல் செய்ய தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம்

செய்ய கோரி தாக்கல் செய்யும் இம்மனுவை ஏற்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**10. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில் :**

| | |
|---|---|
| **1.** | **மனுதாரர் / மேல்முறையீட்டாளர் இடைநிலை மனு எண்.2/2023 மனுவில் கோரியவாறு தாவா சொத்தை ஸ்தல ஆய்வு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செயலாகுமா?** |
| **2.** | **தாவா சொத்தினையும் உள்ளடக்கி, வா.சா.ஆ.1 மூலம் வாதியின் கிரையதாரர் ஆயிஷாபீபியும், வா.சா.ஆ.4 மூலம் வாதியும் கிரையம் பெற்றுள்ளனரா?** |
| **3.** | **தாவா சொத்து நீடனுபோக பிரகாரம் வாதிக்கு பாத்தியப்பட்டதா?** |
| **4.** | **தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளதா?** |
| **5.** | **வழக்குரையில் வாதி கோரிய விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து அசல் வழக்கினை தள்ளுபடி செய்தது சரியானதா?** |
| **6.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய, ரத்து செய்ய முகாந்திரம் உள்ளதா?** |

| | |
|---|---|
| **7.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலைநிற்கத்தக்கதா?** |
| **8.** | **மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்த இ.ம.எண். 2/2023 மனு அனுமதிக்கத்தக்கதா?** |
| **9.** | **இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?** |

11. விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கபட்டனரோ அவ்வாறே இம்மேல்முறையீட்டிலும் இதன்கீழ் அழைக்கப்படுவர்.

12. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**<u>பிரச்சனை எண்கள். 1 கான தீர்வு :</u>**

13. மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பில் தாவா சொத்தினை ஸ்தல ஆய்வு செய்து அதன் இயற்கை தன்மை விஸ்தீரணம் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி இடைநிலை மனு எண்.2/2023 மனு செய்துள்ளார்.

14. அசல் வழக்கில் இரு தரப்பு வாதுரைகள் காணும்போது, தாவா சொத்தான புல எண். 1356/7A விஸ்தீரணம் 0.38.0 எர்ஸ் 94 செண்ட் இடத்தினை உள்ளடக்கியே பவளமுத்து வா.சா.ஆ.1 மூலம் வாதியின் கிரையதாரர் ஆயிஷாபீவிக்கு கிரையம் செய்து கொடுத்து, அவர்

அனுபவித்து வந்து, பின்னர் தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 94 செண்ட் உள்ளடக்கியே வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷா பீவி, வாதிக்கு கிரையம் செய்து கொடுத்து, தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் உள்ளது என வாதி வழக்காடியுள்ளார். மாறாக, வா.சா.ஆ.1 மூலம் வாதியின் கிரையதாரர் பவளமுத்து சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏக்கர் நிலத்தினை மட்டும் கிரையம் செய்து கொடுத்து, அதன் பின்னர் வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷாபீவியும், சர்வே எண்.1356/6 ல் கண்ட 3 ஏக்கர் இடத்தை மட்டும் கிரையம் செய்து கொடுத்துள்ளாரே தவிர, அதன் கீழ்புறம் கண்ட தாவா சொத்தான சர்வே எண். 1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் 94 செண்ட் இடத்தினை பவளமுத்து வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷாபீவிக்கோ, வாதிக்கோ கிரையம் செய்து கொடுக்கவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதிடப்பட்டுள்ளது.

15. இரு தரப்பு வாதுரைகள் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 மூலம் தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் 94 செண்ட் இடத்தினை உள்ளடக்கி வாதியின் கிரையதாரர் ஆயிஷாபீவியும் வாதியும் பெற்றார்களா என்பதே அசல் வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய முக்கிய விசயமாகும்.

16. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 மூலம் வாதியின் கிரையதாரர் ஆயிஷாபீவி மற்றும் வாதி கிரையம் பெற்ற 3 ஏக்கர் நிலத்தினை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து தவறாக உரிமைமூலம் கோரி வருகின்றனர் என்று வாதி தரப்பு வழக்கல்ல. மாறாக வா.சா.ஆ.1 மற்றும்

வா.சா.ஆ.4 மூலம் சர்வே எண்.1356/6ல் கண்ட 3 ஏக்கர் மற்றும் தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் 94 செண்ட் இடத்தையும் சேர்த்து தான் வாதியும் அவர் கிரையதாரர் ஆயிஷாபீவியும் கிரையம் பெற்றனர் என்றும், மேற்படி தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38 ஏர்ஸ் 94 செண்ட் இடத்தினை பிரதிவாதிகள் தவறாக உரிமை கோரி இடையூறு செய்து வருகின்றனர் என்பதே வழக்காகும். வாதி வழக்கு பிரகாரம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 மூலம் 3 ஏக்கர் 94 செண்ட் இடம் கிரையத்திற்குட்பட்டது என்பதாகும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 மூலம் வாதிக்கு 3 ஏக்கர் 94 செண்ட் கிரையம் செய்யப்பட்டதா இல்லையா என்பதை சாட்சி சான்றாவணம் மூலம் தீர்மானிக்கக்கூடியதே தவிர, தாவா சொத்தை ஸ்தல ஆய்வு செய்து, அடையாளம் கண்டு தீர்மானிக்கக்கூடிய ஒன்றல்ல. சுருங்கக்கூறின், அசல் வழக்கினை தீர்வு காண தாவா சொத்தை அடையாளம் காண வேண்டிய அவசியமோ, சூழலோ ஏற்படவில்லை. எனவே, தாவா சொத்தை ஸ்தல ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் மனு சொத்தை ஸ்தல ஆய்வு செய்ய அவசியம் ஏற்படவில்லை. என தீர்மானித்துள்ளபடியால் மனுதாரர் / மேல்முறையீட்டாளர் மனுவில் கோரியவாறு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யலாகாது என இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.1க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்கள். 2 முதல் 4 கான தீர்வு :</u>**

18. தாவா சொத்து கட்டுப்பட்ட சொத்தை பழைய சர்வே எண்.553/2 விஸ்தீரணம் 69 ஏக்கர் 40 செண்ட் அரசு தரிசு நிலமாக இருந்ததை பவளமுத்து மற்றும் அவருடன் சேர்ந்து 37 நபர்கள் சீரமைப்பு செய்து சர்வே எண்.553/2 மொத்த விஸ்தீரணம் 69 ஏக்கர் 40 செண்ட் இடத்தில் புதிய சர்வே எண்.1356/6 ஹெக்டர் 1 ஏர்ஸ் 15 செண்ட் நிலம் பவளமுத்துவிற்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்து சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏர்ஸ் நிலத்தை வா.சா.ஆ.1 – 22.05.1971ம் தேதிய ஆவணம் மூலம் ஆயிஷாபீவி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றும், வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவி கிரையம் பெற்ற மேற்படி சொத்திற்கு கிழக்கே பவளமுத்து மனைவி உடன் பிறந்தவர்களான குணசுந்தரி, மகேஸ்வரி மூலம் இந்த நிலையில் வா.சா.ஆ.1 ல் நான்குமாலில் கிழக்குமாலில் தன் கைவசம் உள்ள நிலம் என தவறாக காண்பித்துள்ளனர் என்றும், வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற சொத்தின் கிழக்குமாலில் உள்ள குணசுந்தரி நிலம் வரை உள்ள சொத்தினை ஆயிஷாபீவி அடைந்து அனுபவித்து வந்து, பின்னர் வா.சா.ஆ.4 மூலம் மேற்படி ஆயிஷாபீவி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். வா.சா.ஆ.4 நாள் முதல் அதில் கண்ட சொத்தும் அதன் கிழக்கே கண்ட தாவா சொத்தும் வாதிக்கு பாத்தியப்பட்டு, வாதி அனுபவித்து வருகிறார் என்றும், இந்நிலையில் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 மூலம் 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளும் வா.சா.ஆ.10 மூலம் 7ம் பிரதிவாதியும் பாக

விடுதலை செய்து கொடுத்துள்ளனர் என்றும், தாவா சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் உள்ள நிலையில், தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஏற்படுத்த பிரதிவாதிகளுக்கு உரிமை பாத்தியம் இல்லை என்பது வாதி தரப்பு வழக்காகும்.

19. மாறாக தாவா சொத்து ஆயிஷாபீவிக்கு அனுபவ பாத்தியப்பட்டு அவர் இறப்புக்கு பின்னர் அவர் வாரிசுகளான 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அனுபவம் செய்து வந்ததாகவும், தாவா சொத்தில் 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் பாக பாத்திய உரிமையை வா.சா.ஆ.9 மூலம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தியதாகவும், நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 7ம் பிரதிவாதி பெயரில் தவறாக பட்டா ஏற்பட்டிருந்ததால் தாவா சொத்தில் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 மூலம் 1ம் பிரதிவாதிக்கு, 2 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் பாக பாத்திய உரிமை விடுதலை செய்து கொடுத்ததாகவும், வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷாபீவி, வாதிக்கு சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏர்ஸ் அளவுள்ள சொத்தை பொறுத்து மட்டும் கிரையம் செய்து கொடுத்தாரே தவிர, தாவா சொத்தினை உள்ளடக்கிய கிரையம் செய்து கொடுக்கவில்லை என்பதே பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்காகும்.

20. தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் 94 செண்ட் இடத்தை உள்ளடக்கிய வா.சா.ஆ.1 மூலம் பவளமுத்துவிடமிருந்து ஆயிஷாபீவி கிரையம் பெற்று, பின்னர் வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷாபீவியிடம் இருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதே

வாதி தரப்பு வழக்காகும். தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் 94 செண்ட் உள்ளடக்கிய வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவியும், வா.சா.ஆ.4 மூலம் வாதியும் கிரையம் பெற்றுள்ளனரா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய விசயமாகும். தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமை மூலத்தை நிலைநிறுத்த வாதி தரப்பில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்கள் முன்னிறுத்தப்பட்டுள்ளது.

21. வாதி தரப்பில் வா.சா.ஆ.1 – 22.05.1971ம் தேதிய கிரைய ஆவணம் பவளமுத்து என்பவரால் ஆயிஷாபீவிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் கிரைய சொத்தாக " மதுரை டிவிஷன், சின்னமனூர் சப் டிவிஷன், மயிலாடும்பாறை கிராமம் புலத்தில் சுயார்ஜிதமாய் நான் சம்பாதித்து நான் காடுவெட்டி திருத்தி அமைத்து வருகின்ற மிஸ்லின் பட்டா சர்வே எண்.553/2 நிர் புஞ்சை ஏக்கர் 69 செண்ட் 40 கீழ்புறத்தில் நடு மையம் என் பாக புஞ்சைக்கு மால் கிழக்கு என் கைவசம் உள்ள இடத்தைச் சேர்ந்த என் புஞ்சை தெற்கு ராமசாமி புஞ்சை மேற்கு வெள்ளைசாமி புஞ்சை வடக்கு பாலம்மாள் புஞ்சை இம்மாலில் என் புஞ்சை ஏக்கர் 3 மூன்றும் சர்வடக்கம் தங்களுக்குள் கிரையம் இந்த சொத்து ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்டது" என கண்டுள்ளது.

22. வா.சா.ஆ.4 வாதிக்கு ஆயிஷாபீவி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமாகும். வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் சொத்தாக "பெரியகுளம் சப் டிவிஷன், கடமலைக்குண்டு சப் டிவிஷன், மயிலாடும்பாறை கிராமம், பவளநகர் புலத்தில் மேற்கண்டபடி நான்

அனுபவித்து வந்து, இதன் மூலம் தங்களுக்கு சர்வே எண்.1356/6 நிர் புஞ்சை ஏக்கர் 3 மூன்று உள்ள நிலத்திற்கு மால் கிழக்கு குணசுந்தரி நிலம், மகேஸ்வரி நிலம், தெற்கு அனா தினம், மேற்கு கட்டமல்லு நிலம், வடக்கு தங்கள் வகையறா நிலம் இம்மாலில் உள்ள மேற்படி புஞ்சை ஏக்கர் 3 க்கு புது அளவில் என் பெயரில் உள்ள பட்டா எண்.226 நிர் பட்டா சர்வே எண். 1356/6 நிர் புஞ்சை ஹெக்டர் 1-21-0 ஆக உள்ள புஞ்சை நிலம் சர்வடக்கமாய் இதற்கு உட்பட்ட மாலில் பாதையும் பாத்தியஸ்தர்களுடன் தங்களுக்கு கிரையம்" என கண்டுள்ளது.

23. வாதி தரப்பில் ஆயிஷாபீவி கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 ல் கண்ட கிரையதாரரான பவளமுத்து கிழக்கு மாலில் தன் கைவசம் உள்ள நிலம் என தவறாக குறிப்பிட்டுள்ளார். உண்மையில், வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவி கிரையம் பெற்ற சொத்தின் கிழக்குமாலில் குணசுந்தரி என்பவரின் நிலம் உள்ளது என்றும், அதனாலேயே வா.சா.ஆ.4 ஆயிஷாபீவி வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தில் நான்கு மாலில் கிழக்கு குணசுந்தரி நிலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், வா.சா.ஆ.4 ல் கண்ட நான்குமால் எல்கை பிரகாரம் வாதிக்கு வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏக்கர் தாவா சொத்தான சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 94 செண்ட் வாதிக்கு பாத்தியம் என்றும், வா.சா.ஆ.4 சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சர்வே எண் மற்றும் விஸ்தீரணத்தை விட நான்குமால் முதன்மையானது

கொள்கைபடி தாவா சொத்து உள்ளடக்கிய வா.சா.ஆ.4 மூலம் ஆயிஷாபீவி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என வழக்காடப்பட்டுள்ளது.

24. வா.சா.ஆ.1 ஆயிஷாபீவியின் கிரையதாரரான பவளமுத்து வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தின் கிழக்குமாலில் தன் கைவசம் (பவள முத்து) உள்ள நிலம் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.4 ல் கண்ட சொத்தின் மாலில் கிழக்கே குணசுந்தரி இடம் என எவ்வாறு ஆயிஷாபீவி குறிப்பிடப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 கிரைய சொத்தில் நான்குமாலில் கிழக்கு பவளமுத்து நிலம் இல்லை, கிழக்கே குணசுந்தரி நிலம் என்பதை உறுதியூட்டக்கூடிய சாட்சி சான்றாவனம் ஏதும் வாதி முன்னிடவில்லை. வாதி தரப்பில் வா.சா.ஆ.4 ல் கண்ட கிரைய சொத்தின் நான்குமாலில் குணசுந்தரி நிலம் உள்ளது என்பதை நிலைநாட்ட வாதி தரப்பில் வாதி மற்றும் குணசுந்தரி இடையிலான அசல் வழக்கு எண்.7/2005 வழக்கு தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக முன்னிடப்பட்டுள்ளது. வாதி மற்றும் குணசுந்தரி இடையிலான அசல் வழக்கு எண்.7/2005 இந்தநிர் பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்ல. எனவே, வா.சா.ஆ.5 அசல் வழக்கு எண்.7/2005 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிரான சான்றாக கருத இயலாது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தின் நான்குமாலில் கிழக்கே பவளமுத்து கைவசம் நிலம் ஏதுமில்லை. குணசுந்தரி நிலம் தான் இருந்தது என்பதை வாதி தகுந்த தெளிவான சாட்சி சான்றாவணம் மூலம் நிரூபிக்கவில்லை.

25. மேலும், வாதி பேரிலான வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் கிரையதாரரான ஆயிஷாபீவி 22.05.1971ம் தேதிய கிரைய ஆவணம் பிரகாரம் (வா.சா.ஆ.1) தனக்கு பாத்தியப்பட்டதும் தன் பெயரில் உள்ள பட்டா எண்.226 ல் கண்டதுமான சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 1 ஹெக்டேர் 21 ஏர்ஸ்க்கு 3 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பு பி.வா.சா.ஆ.1 ஆயிஷாபீவி பெயரில் உள்ள பட்டா பாஸ்புக் பட்டா எண்.226 ல் சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 1 ஹெக்டேர் 21 ஏர்ஸ் ஆகும். சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 0.38.0 ஏர்ஸ் என இரண்டு நிலங்கள் உள்ளது. வா.சா.ஆ.4 கிரையதாரரான ஆயிஷாபீவி வா.சா.ஆ.4 ல், வா.சா.ஆ.1 – 22.05.1971–ம் தேதிய கிரைய ஆவணத்தில் கண்டதும், பட்டா எண்.226 ல் கண்ட சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 1 ஹெக்டேர் 21 ஏர்ஸ் என தெளிவாக குறிப்பாக குறிப்பிட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள பட்டா எண்.226, சர்வே எண்.1356/7A ல் கண்ட சொத்தினை சேர்த்து தான் வாதி வா.சா.ஆ.4 நான்குமால் அடிப்படையில் கிரையம் பெற்றார் என கருத முடியாது.

26. வாதி தரப்பிலான வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், கிரையதாரர் பவளமுத்து குறிப்பிட்டுள்ள நான்குமால் எதிராக தகுந்த சாட்சி சான்றாவணம் இல்லாத நிலையில், எவ்வித அனுமானம் கொள்ளலாகாது.

27. மேலும், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 கிரைய சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில்,

வாதி முன்னிறுத்தும் சர்வே எண் மற்றும் விஸ்தீரணத்தை விட நான்குமால் முதன்மையானது என்ற கோட்பாடு இவ்வழக்கிற்கு பொருந்தாது.

28. வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவி சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 அடிப்படையிலேயே அவர் பெயரில் சர்வே எண்.1356/6 விஸ்தீரணம் 3 ஏக்கர் சொத்தை பொறுத்து பட்டா எண்.226 (பி.வா.சா.ஆ.1) ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வே எண் 1356/6 ல் கண்ட சொத்திற்கு கிழக்கே உள்ள சர்வே எண்.1356/7A விஸ்தீரணம் 94 செண்ட் சொத்தை பொறுத்து ஆயிஷாபீவி பெயரில் பட்டா எண்.226 எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் விளக்கம் இல்லை. எனினும், 7ம் பிரதிவாதி பவளமுத்துவின் மருமகன் ஆவார் என்பதை வாதி தரப்பு வா.சா.3 பாண்டியராஜ் சாட்சியம் மூலம் அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவிக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு கிழக்கே பவளமுத்து கைவசம் நிலம் இருந்துள்ளதால் தான் மேற்படி நிலத்தினை பொறுத்து 7ம் பிரதிவாதி பெயரிலும் பி.வா.சா.ஆ.4 பட்டா எண் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வே எண்.1356/7A பவளமுத்துவிற்கு பின்னர் அவர் மருமகளான அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியான இறந்துபோன மகேஸ்வரிக்கு பாத்தியப்பட்டுள்ளது. தாவா சொத்தினை பொறுத்து ஆயிஷாபீவி பெயரில் தவறாக பி.வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டதன் பேரில் தான், 1ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.9, 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பிறகு 7ம் பிரதிவாதி வா.சா.ஆ.10 மூலம் 1ம்

பிரதிவாதிக்கு பாக விடுதலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பது நன்கு அறிய முடிகிறது.

29. மேலும், இவ்வழக்கில் தாவா சொத்து வாதிக்கு வா.சா.ஆ.4 மூலம் பாத்தியப்பட்டது என வழக்காடியுள்ள வாதி, பின்னர் தாவா சொத்தில் தனக்கு நீடனுபோக பாத்திய பிரகாரம் பாத்தியப்பட்டது என முரணான வாதம் எடுத்துள்ளார். தாவா சொத்தில் வாதி நீடனுபோக உரிமை பாத்தியம் என்ற வாதம் எழுப்ப வேண்டுமெனில், முதலில் தாவா சொத்தில் ஆயிசாபீவி மற்றும் அவர் வாரிசுகளான பிரதிவாதிகளின் உரிமைமூலத்தை ஏற்க வேண்டும். பின்னர் தாவா சொத்தில் வாதியின் அனுபவம், பிரதிவாதிகளுக்கு எதிராக எப்போது எதிரிடையானது என குறிப்பிட்டு வழக்காட வேண்டும். ஆனால், வாதி தனது வழக்குரையிலோ, சாட்சியத்திலோ எப்போது எதிரிடை அனுபவப்பட்டது என குறிப்பிட்டு வழக்காடவில்லை. எனவே, வாதியின் நீடனுபோக பாத்தியம் என்ற வாதம் ஏற்புடையதல்ல.

30. மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் தாவா சொத்தினை உள்ளடக்கி வா.சா.ஆ.1 மூலம் ஆயிஷாபீவியும், வா.சா.ஆ.4 மூலம் வாதியும் கிரையம் பெறவில்லை என்றும், தாவா சொத்து நீண்ட அனுபோக பிரகாரம் வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் இல்லை என்றும் தீர்மானித்து இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள். 2 முதல் 4 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண். 5 கான தீர்வு :</u>**

31. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி தகுந்த சாட்சி சான்றாவணம் மூலம் நிரூபிக்காததால் வழக்குரையில் வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரியானது என இந்நீதிமன்றம் பிரச்சனை எண். 5 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்கள். 6 மற்றும் 7 கான தீர்வு :</u>**

32. பிரச்சனை எண்கள். 2 முதல் 5 தீர்வுகளின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை குறுக்கீடு செய்ய ரத்து செய்ய முகாந்திரம் இல்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலைநிற்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள். 6 மற்றும் 7 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண். 8 கான தீர்வு :</u>**

33. பிரச்சனை எண்.1 தீர்வின் அடிப்படையில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.2/2023 அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் பிரச்சனை எண். 8 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண். 9 கான தீர்வு :</u>**

34. பிரச்சனை எண்கள். 2 முதல் 7 கான தீர்வுகளின் அடிப்படையில் இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் பிரச்சனை எண். 9 க்கு தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

1. இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 57/2017 வழக்கில் கடந்த 26.06.2020 ம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

3. இ.ம.எண்.2/2023 மனுவானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.01.03 15:17:12 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சாட்சி :–</u> – இல்லை

<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சான்றாவணம் :–</u> – இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சி :–</u> – இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சான்றாவணம் :–</u> – இல்லை

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.01.03 15:17:19 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

**<u>நகல்</u>**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி.